# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2314 - 2023 ජනවාරි මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.01.05

*2314 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*


(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 2 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, சனவரி மாதம் 27ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, சனவரி மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”.*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


11 - B 082416 - 5,403 (2023/01)

# ஏல விற்பனைகள்

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஃபெயார்வே மினெர்வா (பிறைவெட்) லிமிட்டெட்.
கணக்கு இல.: 0122 1000 4600.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.11.28ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.12.20ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2019.12.12ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான நூற்று நான்கு கோடியே நாற்பத்தி ஏழு இலட்சத்து இருபத்தி ஓராயிரத்து தொளாயிரத்து எழுபத்தேழு ரூபா அறுபத்தி மூன்று சதம் (ரூபா 104,47,21,977.63) 2019, நவெம்பர் 05 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை நூறு கோடி ரூபா (ரூபா 100,00,00,000.00) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு இரண்டு தசம் ஐந்து வீதம் (2.5%) கட்டணத்துடன் வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள் ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 1306 இன் மீது பெற்றுக் கொண்ட கூறப்பட்ட கடன் தொகைக்காக பிணையாக கூறப்பட்ட சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான கே. பீ. என். சில்வா என்பவர்கள் மூலமாக 2023.01.27ஆந் திகதி மு.ப. 10.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் புறக்கோட்டை இல. C31 கிராம அலுவலர் பிரிவின் கேஹேல்வத்த வோட் இல. 18, அலுத்கடே இல் அமைந்த ஒல்கொட் மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 341, 341/1 ஐ ஏற்ற காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. ஜீ. சீ. குலவன்ச என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, செத்தெம்பர் 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 47 -2013 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் X எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: ஒல்கொட் மாவத்தை இல. 331 ஐ ஏற்ற வளவுகள் (பொலிஸ் விடுதிகள்) மற்றும் ட்றினிட்டி இடம் வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 8 மற்றும் 10 (மிஹிந்து வித்தியாலயம்) ; கிழக்கு: ட்றினிட்டி இடம் வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 8 மற்றும் 10 (மிஹிந்து வித்தியாலயம்) எம். டீ. குணசேன மாவத்தை ; தெற்கு: வீதி மற்றும் ஒல்கொட் மாவத்தை; மற்றும் மேற்கு: ஒல்கொட் மாவத்தை மற்றும் ஒல்கொட் மாவத்தை இல. 331 ஐ ஏற்ற வளவுகள் (பொலிஸ் விடுதிகள்) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று றூட் மற்றும் ஐந்து தசம் இரண்டு ஐந்து பேர்ச் (0ஏ. 3றூ. 5.25பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 47 - 2013 எனும் வரை படத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் X கீழே விபரிக்கப்பட்ட காணியின் உப பிரிவாகும்:

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மா நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் புறக்கோட்டை இல. C31 கிராம அலுவலர் பிரிவின் சென் செபஸ்த்தியன் வோட் இல் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 341 ஐ ஏற்ற காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. ஆர். பொத்தேஜு என்பவரால் தயாரிக்கப்பட்ட 1946, நவெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 3 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் C1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: வரிமதிப்பீட்டு இல. 331 (நொரிஸ் வீதி) பொலிஸ் விடுதிகள் ட்றினிட்டி இடம், வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 8 மற்றும் 10 ட்றினிட்டி தேவாலய வளவு; கிழக்கு: லொட் C2 ; தெற்கு: லொட் D வரிமதிப்பீட்டு இல. 343 (நொரிஸ் வீதி) ; மற்றும் மேற்கு: (நொரிஸ் வீதி) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் மற்றும் இருபது பேர்ச் (1ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 181/122 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

01- 95

**பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீ .எல் . சீ. பகிரங்க ஏல விற்பனை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை*

*பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ இனால் எனக்கு வழங்கப்பட்ட கீழ்க்காணும் அதிகாரத்தின் பிரகாரம், கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆதனம் பின்வரும் திகதியில் பின்வரும் நேரத்தில் அவ்வாதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

*மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், (கம்பஹா பதிவுப் பிரிவிற்குள்) சியனே கோரளை, அதிகாரி பத்து, பியகம பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, மாகொல தெற்கு, இல. 271, கிராம அலுவலர் பிரிவு, மாகொல தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள தற்போது கிரிபத்கொட பாதை, வரிப்பண இல. 367/5 இல் கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கிய "கலபொடவத்த" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் V. காமினி விதான அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2019, செத்தெம்பர் 02 ஆந் திகதிய வரைபட இலக்கம் 1111 இல் விபரிக்கப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு 1 ஆகும்.*

***காணியின் விஸ்தீரணம்: 00ஏ.00றூ.14.65பே. 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26ஆந் திகதி மு .ப.10.00 மணிக்கு***

**ஆதனத்தை வந்தடைதல்** .- *கொழும்பிலிருந்து கண்டி பாதையினூடாக கிரிபத்கொட சந்திவரை வந்து மாகொல பாதைக்கு வலது பக்கம் திரும்பவும். அப்பாதையினூடாக சுமார் 1.7 கி.மீ. வந்து வலது பக்கம் 10 அடி அகல மணல் பாதைக்கு திரும்பவும். சொல்லப்பட்ட ஆதனமானது சுமார் 50 மீ. தூரத்தில் அப்பாதைக்கு முன்னால் அமைந்துள்ளது.*

*"கடப்பாடுடையவரான/ ஈடுவைத்தவரான" கஹவ தடல்ல ஹேவாகே சின்தக என்பவர் பிரசித்த நொத்தாரிசு A.V.N.சந்திமா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2020.01.14 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டுமுறி இல. 877 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு***.- *2022.11.04 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2022.11.08 ஆந் திகதிய "த ஐலண்ட்" , "திவயின" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் முறை**.- *கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாக செலுத்துதல் வேண்டும்.*

1. *கொள்முதல் விலையின் 10% ;*
2. *உள்நாட்டு இறைவரி மற்றும் வெட்வரி 1% ;*
3. *ஏல விற்பனையாளர் கட்டணம் கொள்முதல் விலையில் 2.5% (இரண்டரை வீதம்) ;*
4. *சகல பகிரங்கப்படுத்தல் செலவுகள்;*
5. *விற்பனை நிபந்தனை தொடர்பாக நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தல் கட்டணம்;*
6. *இலிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூபா 1,500.00 மற்றும் விற்பனைக்கான வேறு கட்டணங்கள்.*

*ஏல விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்முதலில் மிகுதி 90% பணத்தொகையை வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும். மேற்கூறிய பணத்தொகையானது 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறுமிடத்து செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையில் 10 % ஐ இழக்க வேண்டி ஏற்படுவதுடன், அவ்வாதனத்தை மீள் விற்பனை செய்வதற்கு வங்கிக்கு அதிகாரமுண்டு.*

*உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு : முகாமையாளர், கடன் அறவிடுதல் , பேன்ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ, கொழும்பு 3.*

*தொலைபேசி இல. 011- 4667220 / 011-4667237*

*துசித் கருணாரத்ன,*
*நீதிமன்ற ஆணையாளர் மற்றும்,*
*உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர்.*

*இல.182/3 (50/3), விஹார மாவத்தை,*
*கொலன்னாவை.*

*தொலைபேசி இல. : 011-3068185*
*பெக்ஸ் இல. : 011- 2572940*

*01- 74*

---

HNB 74-2022

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ**
**களுத்துறை கிளை**

(முன்பு ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என சொல்லப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது பிரிவின் படி ஆதனம் பகிரங்க ஏலவிற்பனை

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீயில் களுத்துறை பிரசித்த நொத்தாரிசு வை.என்.பி. த சில்வா அவர்களால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. *2401* மற்றும் *2018.10.10* ஆந்

திகதியிடப்பட்ட ஈட்டு முறியின் கீழ் பெற்றுக் கொள்ளவேண்டிய கொடுப்பனவை செலுத்துவதற்கு, உடவத்தகே உதேஷ் ரங்க சில்வா கடனாளியாக தவறுகை புரிந்துள்ளதாலும் அந்த ஈட்டு முறியின் கீழ் செலுத்த வேண்டிய கொடுப்பனவு தொகையை எல்லாவகையிலும் நிறுவப்பட்ட கொடுப்பனவு மற்றும் ஏலதாரரின் கொடுப்பனவுகள் உட்பட சகல கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொள்வதற்காக, ஹற்றன் நஷனல் வங்கி பி.எல்.சீ. அவர்களால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, கீழே குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு இந்த ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்.

**ஆதன இடாப்பு**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், தொடமுனை வடக்கு களுத்துறை பெத்தே, களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவில் மற்றும் பிரதேச சபை எல்லையினுள் 727ஏ- அடவில கிராம அலுவலர் பிரிவினுள் மஹஹீனடியன்கல கிராமத்தில் அமைந்துள்ள நாகொட எஸ்டேட் பகுதி என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் கே.டி.எல். விஜேநாயக்க அவர்களால் அளந்து தாயரிக்கப்பட்டுள்ள இல. 1210 மற்றும் 1999.10.22 ஆந் திகதியுடைய வரைபடத்தில் லொட் 01 என அடையாளமிடப்பட்டுள்ள காணிப்பகுதியின் எல்லையாக- வடக்கு: இந்த காணியின் லொட் எல் ( மாவட்ட நீதிமன்ற பி. 5328 என்ற கோவையின்படி); கிழக்கு: இந்த காணியின் லொட் பி மற்றும் 3; தெற்கு: லொட் 2 மற்றும் 3 மற்றும் ; மேற்கு: இல. 1153 என்ற வரைபடத்தில் லொட் 2 மற்றும் லொட் 4 எல்லையாக , விஸ்தீரணம்: 0ஏ.01றூ.0.63பே. விசாலமுடைய காணியோடும்.

மேற்குறித்த காணி அளவையிடப்பட்டதன் பின், அதிகாரம் பெற்ற நில அளவையாளர் லசந்த ஹேவாகம அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்டுள்ள இல. 354 மற்றும் 2013.02.06 ஆந் திகதியுடைய வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள, கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், தொடமுனை வடக்கு களுத்துறை பெத்தே, களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவில் மற்றும் பிரதேச சபை எல்லையினுள் 727ஏ- அடவில கிராம அலுவலர் பிரிவினுள் மஹஹீனடியன்கல கிராமத்தில் அமைந்துள்ள நாகொட எஸ்டேட் பகுதி என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் லசந்த ஹேவாகம அவர்களால் அளந்து தாயரிக்கப்பட்டுள்ள இல. 354 மற்றும் 2013.02.06 ஆந் திகதியுடைய வரைபடத்தில் லொட் 01 என அடையாளமிடப்பட்டுள்ள காணிப்பகுதியின் எல்லையாக- வடக்கு: இந்த காணியின் லொட் எல் ( மாவட்ட நீதிமன்ற பி. 5328 என்ற கோவையின்படி); கிழக்கு: இந்த காணியின் லொட் பி மற்றும் இல.1210 என்ற வரைபடத்தில் காணி லொட் 03; தெற்கு: இல.1210 என்ற வரைபடத்தில் மேற்குறித்த காணியின் லொட் 2 மற்றும் 3 மற்றும் ; மேற்கு: இல. 1210 என்ற வரைபடத்தில் மேற்குறித்த காணி லொட் 4 மற்றும் 2 இல. 1153 என்ற வரைபடத்தில் லொட் 2 , விஸ்தீரணம்: 0ஏ.01றூ.0.63பே. விசாலமுடைய காணியோடும்.

மேலும் அதிகாரம் பெற்ற நில அளவையாளர் கே.டி.எல். விஜேநாயக்க அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்டுள்ள இல. 1210 மற்றும் 1999.10.22 ஆந் திகதியுடைய வரைபடத்தில் லொட் 4 மற்றும் 5 என அடையாளமிடப்பட்ட பாதைக்காக ஒதுக்கப்பட்ட ஊடாக நீடிக்கும் பாதை உரிமையும் மற்றும் அதற்கு சமமான அனைத்து உரிமைகளோடும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக**.- 2022.11.04ஆந் திகதியிடப்பட்ட அரச வர்த்தமானியிலும் 2022.11.23 ஆந் திகதியிடப்பட்ட "மவ்பிம", "டெயிலிமிரர்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளை பார்க்கவும்.

**காணிக்கு செல்லும் விதம்**. - களுத்துறை மணிக்கூடு சந்தியில் இருந்து நாகொட வீதியில் நீடிக்கும் 4 கி.மீ. வரை செல்லும் பொழுது, பி.டி.எஸ். சந்தி வரை உள்ள, அங்கிருந்து வலது பக்கம் திரும்ப ஹீனடியன்கல வீதியில் 700 மீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது "லாவண்யா புரோபடிஸ்" என்ற பெயருடைய அபிவிருத்தி காணியை அடைய மற்றய கை பக்கம் வலது பக்கம் திரும்ப நாகொடவத்த வீதியை அடையலாம். அதே வீதியில் 50 மீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது அடைய 15 அடி அகலப் பாதையில் வலது பக்கம் திரும்ப மேலும் 50 மீற்றர் வரை பிரயாணம் செய்யவும். அதே வீதியில் இறுதியில் அமைந்துள்ள 10 அடி அகலப்பாதையில் குறித்த வரைபடத்தில் உள்ள காணியை அடையலாம். வாகனம் பிரயாணம் செய்யும் பாதை வழியோடும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்** .- உத்தேச கொள்வன வாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும். காசோலைகள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1 %;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% ;
(4) விற்பனை நிபந்தனைகளை உறுதிசெய்வதற்கு நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000.00;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1500.00,
(6) முழு விளம்பரச் செலவுகள்.

கொள்வனவு தொகையில் மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீக்கு செலுத்த வேண்டும். 30 நாட்கள் தவறினால் கொடுக்கப்பட்ட பணம் 10% திரும்பி செலுத்தப்பட மாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விட வங்கிக்கு உரிமை உண்டு.

உரித்து உறுதி மற்றும் குறித்த ஆவணங்களை பரிசோதிக்க மற்றும் மேலதிக விபரங்களுக்கு - மூத்த முகாமையாளர்,

(கடன்கள் அறவிடுதல்), ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு - 10.

தொ. பே. இல.: 011-2661826, 011-2661835.

ஜே. டபிள்யூ. ஈ. ஜயவர்தன,
(தீவுமுழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
அதிகாரம் பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.59,குமார மாவத்தை,
படுவத, தொடந்துவ.
தொலைபேசி : 077-9663420, 071-3358434.
மின்னஞ்சல் : ejayawardhana 77@gmail.com

01- 10

---

**கொமர்ஷல் வங்கி சிலோன் பீஎல்சீ - பழைய சோனகத்தெரு கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

"கடன்பட்டோர் " என்ற வகையில் நொத்தாரிசு ஜே.எம்.பி.எஸ். ஜெயவீர என்பவரினால் 2018, செத்தெம்பர் 28 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட அடைமான இல. 3693 மற்றும் 2019, நவெம்பர் 28 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட அடைமான இல. 3994 கொமர்ஷல் வங்கி சிலோன் பீஎல்சீயில் வைப்பிலிட்ட கந்தையா சரஷ்சந்திரன் என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக கொமர்ஷல் வங்கி சிலோன் பீ. எல். சீ. க்கு ஈடு வைக்கப்பட்ட சொத்து.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோரளை, ராகம் பத்து- வத்தளை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில் மத்துமகல, இல. 177, கிராம அலுவலர் பிரிவு, மத்துமகல கிராமத்தில் அமைந்துள்ள "கொன்கஹாவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதி பெற்ற நில அளவையாளர் எம். டீ. எட்வேட் என்பவரால் தயாரிக்கப்பட்டு 2016.10.04 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 7176B இல் துண்டு 1 சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டு அங்கு காணப்படுகின்ற கட்டிடங்கள், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் பத்து தசம் எட்டு சைபர் பேர்ச் (0ஏ.0றூ.10.80பே.) விஸ்தீரணத்தை நிலவரைபட இல. 7176B இல் துண்டு 1 கொண்டுள்ளதுடன் கொழும்பு காணிப்பதிவகத்தில் தலைப்பு/ பரிமாணம் L 363/ 83 என்ற இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கி சிலோன் பீஎல்சீ யினால் எனக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் கீழ் மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2023, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்** : கொழும்பு நகரத்திலிருந்து கொழும்பு- நீர்கொழும்பு வீதி மார்க்கமாக மாபாஹே சந்தி வரை சென்று இடது பக்கமாக உள்ள பண்டாரநாயக்க வீதியால் திரும்பி சுமார் 200 மீ. தூரம் வரை சென்று இடது பக்கமாக உள்ள பெயரிடப்படாத வீதியால் திரும்பி சுமார் 65 மீ. சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வலது பக்கத்தில் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2022.10.14ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2022.10.12ஆந் திகதிய "டெய்லிமிரர்", "லங்காதீப", மற்றும் "தினக்குரல் " ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் விதம்**- வெற்றிகரமான கொள்வனவு தாரர் ஏல விற்பனை முடிவில் கீழ்க் காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%);
2. உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனைவரி (ஒரு வீதம் (1%) ;
3. ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%);
4. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப் படுத்தல் கட்டணம் ரூபா 3000.00 ;
5. இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 1500.00;
6. விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு.
7. கொள்வனவு விலையின் மிகுதி 90% அல்லது இலங்கை அரசினால் விதிக்கப்பட்ட வரிகள், விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்தல் வேண்டும் .

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

மேலதிக விபரங்களுக்கு:-முகாமையாளர், - கொமர்ஷல் வங்கி சிலோன் பீ. எல். சீ., இல.405 மற்றும் 407, ஆர்.ஏ.டீ. மெல் மாவத்தை, கொழும்பு -03 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும் .

தொ. பே.இல.: 011- 2505220, 011-2592883.

"மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறிவித்தலின்றி இரத்து செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்".

எம்.எச்.டி. கருணாரத்ன (ச. நீ.)
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல.: 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல.: 011-3068185, 2572940.

01- 04

### செலான் வங்கி பீஎல்சீ - வெயங்கொட கிளை

பெறுமதிமிக்க காணி ஒன்றின் பிரசித்த ஏல விற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை*

*வெயங்கொடயில் வசிக்கும் நிமுனி டெரன்ஸ் புஷ்ப குமார சில்வா என்பவர் கடப்பாடுடையவர்/ ஈடுவைத்தவர் என்ற வகையில் கொடுப்பனவில் தவறியுள்ளதால், பிரசித்த நொத்தாரிசு W.A.R. ஜனக வெல்லப்பிலி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.12.21 ஆந் திகதியிடப்பட்ட 1670 ஆம் இலக்க ஈட்டு முறி மூலம் செலான் வங்கி பீஎல்சீ யில் அடகு வைக்கப்பட்ட வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் அதன் சுற்றுச்சூழலானது.*

*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு செலான் வங்கி பீஎல்சீ யினால் எனக்க வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீ.எல்.சீ, இல.90, காலி வீதி, கொழும்பு 03 இல் உள்ள வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.*

*இந்த ஏல விற்பனையானது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கொவிட் 19 நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டுதலுக்கேற்ப நடாத்தப்படும்.*

#### அட்டவணை

*மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், கம்பஹா காணி பதிவு பிரிவிற்குள் அலுத்குரு கோரளே, தாசியா பத்துவே, மினுவங்கொட பிரதேச சபை பிரிவினுள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவினுள் மாரபொர 19 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவிற்குள் மாரபொல கிராமத்தில் உள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.கே. ஏ. எஸ். பத்மினி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2018.09.05 ஆந் திகதிய 15819 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "மாரபொல எஸ்டேட்" என்று அழைக்கப்படும் காணியானது லொட் X என அடையாளமிடப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணித்துண்டின் அளவு பதினைந்து பேர்ச் (0ஏ.0றூ.15பே.) விசாலமான காணி மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்தும் அடங்கலாக.*

*உரிமம் பெற்ற நில அளவையாளர் ஐ.கொடம்பகே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 6524 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 35 மற்றும் 12 என அடையாளமிடப்பட்டு வீதிக்காக ஒதுக்கப்பட்டதன் மூலம் சாலையின் மேல் மற்றும் சாலை வழியாக சாலை அணுகலுடன் சேர்ந்து.*

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி**.- *செலான் வங்கியின் வளாகத்தில் இருந்து வெயாங்கொட - நீர்கொழும்பு வீதி ஊடாக 3.1 கி.மீ. நய்வல நான்கு வழி சந்தி வரை சென்று இடது பக்கத்தில் உள்ள நய்வல, உடுகம்பொல வீதி ஊடாக 1.4 கி.மீ. சென்ற பிறகு வலது பக்கத்தில் உள்ள வீதிக்காக ஒதுக்கப்பட்ட சுவர்ணவிமன என்று பெயரிடப்பட்டுள்ள கொங்கிறீட் செய்யப்பட்ட வீதி ஊடாக 150 கி.மீ. சென்ற பிறகு வலது பக்கத்தில் உள்ள 15 அடி அகலமான சரளை பாதை ஊடாக 15 மீற்றர் சென்ற பிறகு வலது பக்கத்தில் இந்த விடயத்துக்கான காணி அமைந்துள்ளது.*

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- *2022.12.02 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும், 2022.12.02 ஆந் திகதிய "டெய்லி மிரர்", "அத", மற்றும் "தமிழன்' ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

**கட்டணங்கள் செலுத்தும் விதம்** .-*உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.-*

*(1) கொள்வனவு விலையின் 10%;*
*(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%;*
*(3) ஏல தாரரின் தரகுப் பணம் 2.5%;*
*(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்துவதற்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2500.00;*
*(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ;*
*(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.*

*கொள்முதல் விலையின் 90 வீதத்தையும், மிகுதி இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு , ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற் குறிப்பிட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.*

*உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும், "பிரதான முகாமையாளர்- (சட்டம் ), செலான் வங்கி பீஎல்சீ , இல. 90, காலி வீதி, கொழும்பு 03." தொலைபேசி: 011-2456494, 011-2456479.*

*மேற்படி ஏல விற்பனையை எவ்வித முன்னறிவித்தலுமின்றி இடைநிறுத்துவதற்கு / இரத்துச் செய்வதற்கு வங்கிக்கு அதிகாரமுண்டு.*

*சந்திமா பிரியதர்ஷனீ கமகே,*
*நீதிமன்ற ஆணையாளர்,*
*விலைமதிப்பீட்டாளர் மற்றும்*
*உரிமம் பெற்ற ஏலதாரர்.*

*இல. 9-i, ஹைலெவல் வீதி,*
*சர்வோதய மாவத்தை,*
*பனாகொட, ஹோமாகம.*
*தொலைபேசி : 071-4318252, 011- 2173282.*

*01- 109*

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க சட்டத்தாலும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

1. கடன்தொடர்பு இல.: 80139385/83233591.

இல. 122/ 3, அங்கம்மன வீதி, இரத்தினபுரி எனும் முகவரியிலுள்ள திரு. குடா விதானலாகே ஹிமால் நயனப்பிரிய சேனாரத்ன மற்றும் திருமதி ஹீந்திகா பத்ம விஜேவர்தன ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய 2022.11.11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2306ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2022.11.02 ஆந் திகதி புதன்கிழமை, "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவையிலுள்ள முதலையும் விற்பனைத் திகதி வரை செலுத்த வேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் திருவாளர்கள் ஷொக்மன் மற்றும் சமரவிக்ரம ஏலநிறுவனதாரர் 2023.01.26 ஆந் திகதி வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

***ஈட்டுப் பத்திரம் (2016.11.24, 2018.09.27 ஆம் திகதிகளிட்ட 00330054122 என்ற இலக்கத்தைக் கொண்ட உரித்துச் சான்றிதழ்)***

1. காணி பற்றிய விவரம்

| | | | |
|---|---|---|---|
| a) | மாவட்டம் | : | இரத்தினபுரி |
| b) | பிரதேச செயலகம் | : | இரத்தினபுரி |
| c) | கிராம அலுவலர் பிரிவு | : | அங்கம்மன |
| d) | கிராமம் அல்லது நகரம் | : | பட்டுகெதர |
| e) | வீதி | : | |
| f) | வரி மதிப்பீட்டு இலக்கம் | : | |
| g) | நில அளவைப்பட இலக்கம் | : | 620292 |
| h) | தொகுதி இலக்கம் | : | 05 |
| i) | காணித்துண்டு இலக்கம் | : | 0087 |
| j) | பரப்பு | : | 0.0485 ஹெக்டயர் |
| k) | கூட்டாட்சி (Condominium) ஆதனமெனில் கூறுகளின் எண்ணிக்கை : | | |

முன் பதிவுத் தொடர்பு:

| | | | |
|---|---|---|---|
| a) | பதிவுசெய்த இடம் | : | இரத்தினபுரி |
| b) | உரித்துச் சான்றிதழ் இல. | : | 00330054122 |
| c) | உரித்தின் வகை | : | முதலாவது |

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) கே. கே. சுவர்ணதிலக்க,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
இரத்தினபுரி,
2022.12.20.

01- 115

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2023**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வியாழன் | 05.01.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.12.2022 |
| | | வெள்ளி | 13.01.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.12.2022 |
| | | வெள்ளி | 20.01.2023 | .. | நண்பகல் 12 | வியாழன் | 05.01.2023 |
| | | வெள்ளி | 27.01.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.01.2023 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 03.02.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.01.2023 |
| | | வெள்ளி | 10.02.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.01.2023 |
| | | வெள்ளி | 17.02.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.02.2023 |
| | | வெள்ளி | 24.02.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.02.2023 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 03.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.02.2023 |
| | | வெள்ளி | 10.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.02.2022 |
| | | வெள்ளி | 17.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.03.2023 |
| | | வெள்ளி | 24.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.03.2023 |
| | | வெள்ளி | 31.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.03.2023 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.